**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.98/2020**
**PW2**

| | | |
|---|---|---|
| Name | : | விஜய் |
| Father's Name | : | வெங்கட் |
| Village | : | கோணலூர் |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.07.2025.
A1 to 7 present. A8 to 11 absent. Petition U/s.317 Crpc filed and allowed for A8 to 11.

**முதல் விசாரணை**

நான் கோணலூர் கிராமத்தில் வசித்து சிவில் இன்ஜினியராக பன்ரூட்டியில் பணிபுரிகிறேன். அ.சா.1 சிவா என் பெரியப்பா மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். ஆஜராகாத எதிரிகளையும் தெரியும். 04.12.2015 அன்று மாலை 4.30 மணிக்கு நானும், என் அம்மா மலர்கொடி, என் அக்கா தீபா, பெரியம்மா சுகந்தா, அண்ணன் சிவா ஆகியோர் வீட்டில் இருந்தோம். அப்போது சீத்தாராமன், பிரகாஷ், பெருமாள், அர்விந்த், செல்வராஜ் ஆகியோர் என் வீட்டிற்கு கத்தி, கடப்பாரை, தடி ஆகியவற்றை வைத்துக்கொண்டு வந்தார்கள். எங்கள் நிலத்தில் இருந்த 63 தேக்கு மரத்தை வெட்டி சாய்த்துவிட்டார்கள். எங்கள் வீட்டின் 12 அடி உயரம், 60 அடி நீளம் கொண்ட காம்பவுண்ட் சுவரை இடித்து விட்டார்கள். அதை என் அண்ணன் சிவா கேட்டதற்கு எதிரிகள் " ஒழுங்காக இரு இல்லையென்றால் அடித்து சாய்த்துவிடுவோம் " என்று மிரட்டினார்கள்.

"நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை வாபஸ் பெறவில்லையென்றால் பெட்ரோல் ஊற்றி கூண்டோடு கொளுத்திவிடுவோம்" என்று மிரட்டினார்கள். நாங்கள் பயந்து கொண்டு வீட்டில் போய் கதவை சாத்திக்கொண்டோம். 05.12.2015 அன்று இரவு 08.30 மணிக்கு வேட்டவலம் காவல் நிலையத்திற்கு சென்று என் அண்ணன் புகார் கொடுத்தார். 06.12.2015 அன்று வேட்டவலம் போலிசார் இரவு விசாரித்தார்கள் . எங்கள் பட்டா இடத்தின் வழியாக சுடுகாட்டிற்கு செல்ல பாதையை அமைக்க ஊர்க்காரர்கள் முயற்சி செய்தார்கள் . என் பாட்டி கண்ணம்மா சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றார் . தண்டோரா போட்டு எங்கள் குடும்பத்தை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளார்கள். இதனால்தான் முன்விரோதம் இருந்தது. இந்த சம்பவம் சம்மந்தமாக போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தனிப்பட்ட முறையில் எனக்கும் விரோதிகளுக்கும் எந்த விரோதமும் கிடையாது. நான் பட்டா நிலம் என்று சொல்வது சுந்தரேச ஐயர் வகையறா மற்றும் எக்கியநாராயணனிடம் இருந்து கிரையம் பெற்றது என்றால் சரிதான் . அந்த பாதை அந்த காலத்தில் இருந்தே ஊர்மக்கள் சுடுகாட்டிற்கு போக பயன்படுத்தும் வழி என்றால் சரிதான். எதிரிகள் எந்தெந்த ஆயுதங்களை கையில் வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது . எதிரிகள் ஊரில் தலைவராகவும் உப தலைவராகவும் இருந்து ஊரை வழிநடத்துபவர்கள் என்றால் சரிதான் . ஊர்மக்கள் எங்களை எதற்காக ஒதுக்கிவைத்தார்கள் என்றால் என் பாட்டி அந்த வழியாக சவங்களை எடுத்து செல்லக்கூடாது என்று உத்தரவு பெற்றிருந்த காரணத்தால் ஒதுக்கிவைத்தார்கள். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் , ஆற்று தண்ணீர் ஓடையை மறித்து அரசுக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டிருந்த மதில்சுவர் மழையினால் இடிந்து விழுந்தது என்றும், ஏற்கனவே எங்களுக்கும் ஊர்மக்களுக்கும் சுடுகாட்டு பாதை சம்மந்தமாக இருந்து வந்த முன்பகையை வைத்து என் அண்ணன் கொடுத்த பொய் புகாரை சார்ந்து சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் யாரும் மரங்களை வெட்டவோ , என் அண்ணனை மிரட்டவோ , அச்சுறுத்தவோ இல்லை என்றும் , நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.